

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருமழிசை பேரூர் கழக திமுக சார்பில் கழக கொடி ஏற்றுதல் மற்றும் நலத்திட்ட உதவி வழங்கும் நிகழ்ச்சி பேரூர் கழகச் செயலாளர் தி.வே.முனுசாமி தலைமையில் ஒன்றிய பிரதிநிதி பார்த்திபன் ஏற்பாட்டில் 5 வது வார்டு பகுதியில் நடைபெற்றது இதில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சாமு. நாசர் கழகக் கொடியை ஏற்றி வைத்து பள்ளி மாணவ மாணவிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், ஒன்றிய கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ் பொதுக்குழு உறுப்பினர் ஜெ. மகாதேவன், மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ், மாவட்ட பிரதிநிதி வழக்கறிஞர் வி.எம். நாகதாஸ், நிர்வாகிகள் பி.அருள், தி.கோ.செல்வம், எஸ்.வேந்தன், எம்.சுரேந்தர், கே.கங்காதரன், ஜான் மேத்யூ, கே.வேலு, எஸ். இளங்கோவன், ஆர்.மோகன்ராஜ், ராகேஷ், ரவி, மோகன், வெண்ணில் குமார், எம்.மகாதேவன், மோகனலிங்கம், பழனி, கண்ணன், சார்லி, சந்திரன், என்.சங்கர், மணிவண்ணன், பாபா, உள்பட பலர் கலந்து கொண்டார்கள்.

## போகி, பொங்கல் பண்டிகையையொட்டி, மாநகராட்சி சார்பில்

# 34,748 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் அகற்றப்பட்டது!

சென்னை,ஜன.18-

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் போகிப் பண்டிகையை முன்னிட்டு, சுற்றுச்சூழல் மாசுபாடு ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் பொதுமக்களிடம் பயன்பாட்டில் இல்லாத பிளாஸ்டிக், டயர் மற்றும் பழைய துணி உள்ளிட்ட இதரப் பொருட்களை தூய்மைப் பணியாளர்களிடம் ஒப்படைக்குமாறு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு, 11.01.2025 முதல் 13.01.2025 வரை பயன்பாட்டில் இல்லாத பொருட்கள் பெறப்பட்டன.

அதனடிப்படையில் 11.01.2025 முதல் 13.01.2025 வரை 31.79 மெட்ரிக் டன் பழைய துணிகள், 18.80 மெட்ரிக் டன் டயர் மற்றும் டியூப்கள், 24.14 மெட்ரிக் டன் பிளாஸ்டிக் பொருட்கள், 12.31 மெட்ரிக் டன் இதரப் பொருட்கள் என மொத்தம் 87.32 மெட்ரிக் டன் பயன்பாட்டில் இல்லாத பொருட்கள் பெறப்பட்டு அகற்றப்பட்டது.

மேலும், பொங்கல் பண்டிகையையொட்டி, தூய்மைப் பணியாளர்கள் மூலம் வீடுகள்தோறும் சென்று மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் பெறப்பட்டன. அதனடிப்படையில் 11.01.2025 அன்று 5,424 மெட்ரிக் டன், 12.01.2025 அன்று 5,827 மெட்ரிக் டன், 13.01.2025 அன்று 5,958 மெட்ரிக் டன், 14.01.2025 அன்று 6,233 மெட்ரிக் டன், 15.01.2025 அன்று 5,851 மெட்ரிக் டன், 16.01.2025 அன்று 5,455 மெட்ரிக் டன் என 11.01.2025 முதல் 16.01.2025 வரை மொத்தம் 34,748 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் பெறப்பட்டு அகற்றப்பட்டது.



சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க. நகர் வடக்குப் பகுதி, 74வது வட்ட தி.மு.க. சார்பில் சமத்துவப் பொங்கல் விழா மற்றும் கோலப்போட்டி – விளையாட்டுப் போட்டிகள் வட்டச் செயலாளர் செ.புஷ்பராஜ் தலைமையில் பகுதிச் செயலாளர் செ.தமிழ்வேந்தன் முன்னிலையில் பெரம்பூர் ஆர்.ராஜன் வரவேற்புரையில்நடைபெற்றது. இவ்விழாவை மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு துவக்கி வைத்துபரிசு வழங்கினார். இவ்விழாவில் மேயர் பிரியா ராஜன், மற்றும் பி.சத்திஸ், இளஞ்செழியன், ராஜ், பா.ஜெகதீஷ், பகத்சிங், சத்திய மோகன், இ.என்.கே.வீரமணி, ஜான் நிலவழகன், குப்புசாமி, பாபு, பாலகிருஷ்ணன், நரேஷ் குமார், வெங்கட், தமிழ்செல்வி, சாந்தி, சீரணி, ஜெயலட்சுமி, உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். பி.சத்தீஸ், ஜி.கிருஷ்ணகுமார் நன்றி கூறினர்.

## துணை முதல்வர் பிறந்தநாள்: பேரூர் கழகச் செயலாளர் தி.வே.முனுசாமி தலைமையில்

# திருமழிசை பகுதியில் 40 அடி உயரம் கொண்ட கழகக் கொடி!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஏற்றி வைத்தார்!

திருவள்ளூர், ஜன. 18;

தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருமழிசை பேரூர் கழக திமுக சார்பில் கழக கொடி ஏற்றுதல் மற்றும் நலத்திட்ட உதவி வழங்கும் நிகழ்ச்சி 5 வது வார்டு பகுதியில் நடைபெற்றது.

இதில் திருமழிசை பேரூர் கழகச் செயலாளர் தி.வே.முனுசாமி தலைமை தாங்கினார். ஒன்றிய கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ் பொதுக்குழு உறுப்பினர் ஜெ. மகாதேவன், மாவட்ட பிரதிநிதி வழக்கறிஞர் வி.எம். நாகதாஸ், பேரூர் கழக பொருளாளர் பி.அருள் பேரூர் துணை செயலாளர் தி.கோ.செல்வம், எஸ்.வேந்தன், முன்னிலை வகித்தார்கள்

ஒன்றிய பிரதிநிதி பார்த்திபன் வரவேற்புரையாற்றினார்.

இதில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளர் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சாமு.நாசர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு 40 அடியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கழக கொடி கம்பத்தில் கழகக் கொடியை ஏற்றி வைத்து பள்ளி மாணவ மாணவிகளுக்கு இனிப்பு மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்

இந்நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே. ஜெ.ரமேஷ், மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ், தொகுதி தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் எம்.சுரேந்தர், பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் கே.கங்காதரன், பேரூர் ஆதிதிராவிட நல குழு அணி அமைப்பாளர் எஸ். இளங்கோவன், , நிர்வாகிகள் கே.வேலு, ஆர்.மோகன்ராஜ், ராகேஷ், ரவி, மோகன், வெண்ணில் குமார், எம்.மகாதேவன், மோகனலிங்கம், பழனி, கண்ணன், சார்லி, சந்திரன், என். சங்கர், மணிவண்ணன், பாபா, கழக மூத்த முன்னோடிகள் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர் முடிவில் வார்டு செயலாளர் ஜான் மேத்யூ நன்றி கூறினார்.

## படப்பை ஆ.மனோகரன் தலைமை! சின்னத்திரை நட்சத்திரங்கள் பங்கேற்கும் பொங்கல் விழா நகைச்சுவைப் பாட்டுமன்றம்!

# திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கி படப்பையில் மாபெரும் பொதுக்கூட்டம்!

## கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. – அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரை!

சென்னை, ஜன.18-

குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் - காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன் அறிக்கை வருமாறு:-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க மற்றும் படப்பை ஊராட்சி தி.மு.க. சார்பில் படப்பை பேருந்து நிலையத்தில் நாளை( 19.01.2025 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.00 மணிக்கு சின்னத்திரை நட்சத்திரங்கள் பங்கேற்கும் மாபெரும் பொங்கல் விழா நகைச்சுவைப் பாட்டு மன்றம், பொங்கல் விழாவினை முன்னிட்டு நடைபெற்ற பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற சுமார் 500 பேருக்கு பரிசளிக்கும் நிகழ்ச்சி மற்றும் திராவிடமாடல் அரசின் சாதனைகளை விளக்கி மாபெரும் பொதுக்கூட்டம் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன் தலைமையில், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர் சரஸ்வதி மனோகரன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் படப்பை ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.கர்ணன் ஆகியோர் வரவேற்புரையில் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் மு.சுப்ரமணி, வ.நந்தகோபால், ஏ.மணி, வாசுகிமகேஷ், சி.பார்த்தசாரதி, வி.அரி, மு.இராஜேந்திரன், மா.பரிமேலழகன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

நிகழ்ச்சியின் முதலில் "மக்கள் முதல்வரின் திராவிட மாடல் ஆட்சியில் பெரிதும் மகிழ்ந்திருப்போர் ஆற்றல் வாய்ந்த ஆண்களா... அறிவு மிக்க பெண்களா.." என்ற தலைப்பில் கவிஞர் கல்பாக்கம் ரேவதி நடுவராக முனைவர் திருவாரூர் அபு, 'சன் டி.வி.புகழ்' மணப்பாறை லலிதா, 'விஜய் டி.வி. புகழ்' திருச்சி அன்னலட்சுமி, 'விஜய் டி.வி.புகழ்' கல்பாக்கம் காயத்ரி, இசை : விஜய் டி.வி. 'அது இது எது புகழ்' எழில் ரிதம்ஸ் ஆகியோர் பங்கேற்கும் மாபெரும் இன்னிசை பட்டிமன்றம் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் கழகப் பொருளாளரும், கழக நாடாளுமன்ற குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், குறு-சிறு மற்றும் நடுத்தர தொழில்நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன், ஆகியோர் கலந்துகொண்டு பொங்கல் விழாவினை முன்னிட்டு நடைபெற்ற பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற சுமார் 500 பேருக்கு பரிசளிப்பு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இதில் திருப்பெரும்புதூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர் மீஞ்சூர் கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், குன்றத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ஏ.வந்தே மாதரம், உமாமகேஸ்வரி வந்தே மாதரம் சங்கீதாவேலு, பொன்.ரமேஷ்கவி, எஸ்.கர்ணன், மலர்விழிதமிழ்அமுதன், கு.ஏழுமலை, லட்சுமி ஞானசேகரன், ச.பாலகிருஷ்ணன், எஸ். வைரம், ஜி.எ.ராயப்பா, தினேஷ்கந்தசாமி, ம.ரேவதி, என்.எஸ்.இளங்கோ, வி. எஸ்.கோதண்டராமன், ப. அறிவொளி லோ.சுதாகர், ரா.தீபக்ராஜ், மா.சே.பிரகாஷ், க.பா.ஆடலரசு, அ. ஜமீர், இரா.குமரவேல், செ. பார்த்திபன், சையத்ரமிஸ், இ.பாலாஜி, மகாலட்சுமி எட்டியப்பன், மல்லிகாநடராஜன், ஷோபா ரகுநாதன், ஜி . இருசப்பன் , ஏ.இ.பரசுராமன், ம.அசோக்குமார், ஏ.இ.பஞ்சாட்சரம், ப . வேல்முருகன் , ச.ரஞ்சித்குமார், இரா.சந்திரசேகர், மூ. குமார், வ.வீரபாண்டியன், ர.தமிழ்தாசன், க.யுவராணி, மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

நிறைவாக படப்பை ஊராட்சி மன்ற துணைத்தலைவர் ஏ.டி.எம்.வினோத் நன்றியுரையாற்றுகிறார்.

எனவே இந்நிகழ்ச்சியில் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழகத்தை சார்ந்த கழக முன்னோடிகள், கிளைக்கழக செயலாளர்கள், நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்து உள்ளார்.

## புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில்

# மாநில அளவிலான மாபெரும் ரேக்ளா ரேஸ் போட்டி!

## மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. பரிசுகள் வழங்கினார்!

சென்னை,ஜன.18-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, மாநில அளவிலான மாபெரும் ரேக்ளா ரேஸ் போட்டி மாதவரம் அடுத்த தீயம்பாக்கம் காந்தி நகரில் நடைபெற்றது.

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் 17 வது வட்டம் தீயம்பாக்கம், காந்திநகர், கண்ணம்பாளையம் சந்திப்பிலிருந்து அரியலூர் வரை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில் நடைபெற்றது.

17வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் வரவேற்றார்.

வட்டச் செயலாளர்கள் 16வது வட்டச் செயலாளர் இ.கண்ணப்பன், 19 ஆவது வட்ட செயலாளர் மாத்தூர் கா. தாமரைச்செல்வன், 23வது வட்டச் செயலாளர் பி .எஸ் .சந்துரு, முன்னாள் கவுன்சிலர் கவிதா நாராயணன், 17 வது வட்ட நிர்வாகிகள் சி. மூர்த்தி, சி. பாலாஜி, என். குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம் எல் கலந்து கொண்டு போட்டியை துவக்கி வைத்து பரிசுகள் வழங்கினார்.

தமிழ்நாடு முழுவதிலும் இருந்து மாடுகளும், மாட்டின் உரிமையாளர்களும் வண்டிகளுடன் திரளாக கலந்து கொண்டார்கள்.

போட்டிகள் நான்கு பிரிவுகளாக நடைபெற்றது. பெரிய கன்று, புதிய கன்று முதல் பிரிவு, புதிய கன்று இரண்டாவது பிரிவு, இரண்டு பல் கன்று என நான்கு வகையாக நடைபெற்றன

சிறிய வகை மாடுகளுக்கு கண்ணம்பாளையம், காந்திநகர் சந்திப்பு முதல் தீயம்பாக்கம், சென்றம்பாக்கம், பெரியார் நகர் ரவுண்டனா வரை சென்று, மீண்டும் கண்ணம்பாளையம் அதே வழியில் திரும்பி வரும் வகையில் சாலை அமைக்கப்பட்டு இருந்தது. அதே போல பெரிய கன்றுகளுக்கு காந்திநகர், தீயம்பாக்கம், சென்றம்பாக்கம், அரியலூர் எடை மேடை வரை சென்று திரும்பி வரும் வகையில் பாதை அமைக்கப்பட்டு முதலில் வந்த மூன்று இடங்களை பிடித்த மாடுகளுக்கும், மாட்டின் உரிமையாளர்களுக்கும் ரொக்க தொகையும், சுழல் கோப்பையும் வழங்கப்பட்டன. அந்த வகையில் பெரிய மாடுகளில் நடைபெற்ற போட்டியில் முதல் பரிசை கே. பி.பார்க் விஜய் அரசன் எம்பி பிரதர்ஸ் பெற்றார். இரண்டாவது பரிசை சிவா திருவெற்றியூர், மூன்றாம் பரிசு ஆனந்த் ஆச்சா கள்ளிகுப்பம், நான்காவது பரிசு முருகா வண்ணாரப்பேட்டை ஆகியோர் பெற்றனர்.

புதிய கன்று முதல் பிரிவில் முதல் பரிசை பட்டாளம் ராஜி, இரண்டாவது பரிசை திருவெற்றியூர் சிவா, மூன்றாவது பரிசை கரிமேடு குள்ளா எம்பி பிரதர்ஸ், நான்காவது பரிசை மண்ணடி மாணிக்கம் ஈரல் தம்பி ஆகியோர் பெற்றனர்.

புதிய கன்று இரண்டாவது பிரிவுக்கு முதல் பரிசு யானைகவுனி, இரண்டாவது பரிசு புயல் ஆச்சா, மூன்றாவது பரிசு குல்லா லாயிட்ஸ் ரோடு, நான்காம் பரிசு செட்டிமேடு கோபால் எம்பி பிரதர்ஸ் ஆகியோர் பெற்றனர்.

இரண்டு பல் கன்று போட்டியில் முதல் பரிசை பட்டாளம் ராஜி சீனியும், இரண்டாவது பரிசை யானைகவுனி கோன் கோவிந்தராஜ், மூன்றாவது பரிசை வண்ணாரப்பேட்டை தீனா, நான்காவது பரிசை கோயம்பேடு செல்வம் என்கின்ற போட்டி ஆகியோர் பெற்றனர். இவர்களுக்கு பரிசு தொகையும் சுழற் கோப்பையும் மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம் எல்ஏ மற்றும் தலைமை செயற்குழு உறுப்பினர் மிசா. மதிவாணன், செங்குன்றம் காவல் நிலைய ஆய்வாளர் திரு புருஷோத்தமன் மற்றும் உதவி ஆய்வாளர்கள், வட்ட செயலாளர்கள் கே. கருணாகரன்,இ. கண்ணப்பன், மாத்தூர் கா. தாமரைச்செல்வன், பி எஸ் சந்துரு, சென்ற பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் என். ராமு ஆகியோர் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சிகள் மாவட்ட வர்த்தக அணி தலைவர் மஞ்சம்பாக்கம் ஆர். பாபு, எஸ். உதயகுமார்,கே. சண்முகப்ரியன், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர்கள் எச். பீர்முகமது, கொசப்பூர் வெங்கடேசன்,எம் அமுதா, சகிலா

17 வது வட்ட பாக முகவர்கள் என். நாகராஜன், டி. திவாகர், வி.சுமீர், ஜி. கார்த்திக், வக்கீல் எம். என். தளபதி, மணலி புதுநகர் சி எம். ராஜா, எலந்தனூர் சிவப்பிரகாஷ், விஜய் ஆனந்த், தினேஷ் சங்கர், மாத்தூர் ராஜேஷ் கண்ணன்,புழல் வி.ஆர். கே. ஜவகர், பழைய நாபாளையம் தசரதன், அரியலூர் எஸ். நாகராஜ் வடபெரும்பாக்கம் ஜி. முனிவேல், ஜி. செல்வம், எஸ். கமலநாதன், பி. செந்தில், எம். கோவிந்தன், இ. கார்த்திக் காந்திநகர் சுந்தரம், வாசு, சரவணன், தீயம்பாக்கம் ஜான்சன் பூபாலன் சுதர்சன் விஜயன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்

வட்டத் துணைச் செயலாளர் சி. பாலாஜி,மாதவரம் வடக்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என். அஜய் தென்னவன் நன்றி கூறினார்கள்.



சென்னை தென் மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் மதி எம்.சி., தலைமையில் கிழக்கு பகுதி செயலாளர் எஸ் முரளி, ஜி.ஆர்.ராஜேந்திரன், ஆர்.எல்.வி. அசோக், பா.பாக்கியதாஸ், அகல்யா விஸ்வநாதன், ஜி.முருகையன், முன்னிலையில் வட்ட கழக செயலாளர்கள் டி.ராஜா வேலு, சீ.கிருஷ்ணமூர்த்தி, அ.நாகராஜன், மூ.இ.ஏழுமலை, மூ.ராஜேந்திரன், வரவேற்பில் தென் மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., மாநில தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர் மயிலை தொகுதி மேற்பார்வையாளர் கோவி.லெனின் ஆகியோர் கழக நிர்வாகிகளுக்கு பொங்கல் பரிசு வழங்கினார்கள். இந்நிகழ்விற்கு மாநில மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். வட்ட கழக செயலாளர் ராஜா சுரேஷ்குமார் நன்றி கூறினார்.



மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் மாட்டுப் பொங்கல் மற்றும் திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு 17வது வட்டம் செட்டிமேடு பகுதியில் உள்ள காளை மாடுகள் அலங்கரிக்கப்பட்டு, கொண்டாடப்பட்டது. மேலும் பகுதி மக்களுக்கு கரும்பு, பொங்கல் தொகுப்பு, நாள்காட்டி மற்றும் நலத்திட்ட உதவிகளை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வழங்கினார். வட்டச் செயலாளர் கே.கருணாகரன் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் சீ.மூர்த்தி, சி.பாலாஜி, கே.சண்முகப்ரியன், எஸ்.சிவக்குமார், டி.திவாகர், எம்.ஜான்சன், இ.சுதர்சன், ஜி.பூபாலன்,எம். கோபால், எம்.விக்கி, எம்.விஜய், பி.கீர்த்தி, எம்.என்.அஜய் தென்னவன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.


